Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No. 268 / 2017

DEPOSITION OF WITNESS : P.W.3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மோகன்முனியாண்டி | Father's Name/ Husband Name | : | பெருமாள் |
| Village | | புள்ளக்காபட்டி | Taluk | : | |
| Religion | : | | Age | : | |
| Calling | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.09.2023

( எதிரி ஆஜர் இல்லை . கு.வி.மு.ச 317 ன் படியான மனு அனுமதிக்கப்பட்டது. )

**முதல் விசாரணை**

நான் தற்போது பெரியகுளம் தாலுகா அலுவலகத்தில் தேர்தல் துணை வட்டாச்சியராக பணியில் உள்ளேன். நான் கடந்த 2013- 2014 ல் மயிலாடும்பாறை உள்வட்ட வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்தேன். கடந்த 12.01.2012 அன்று மதியம் 2.15 மணியளவில் நானும், என்னுடன் வேலை பார்க்கும் கிராம உதவியாளர் ராமானுஜம் என்பவரும் மண்ணுத்து கிராமத்தில் உள்ள பாண்டி தோட்டத்து பக்கமாக சென்றபோது மயிலாடும்பாறை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சரவணன் மற்றும் இரு காவலர்கள் பொன்னுச்சாமி என்பவரை விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் . அப்போது அவர் அனுமதியின்றி துப்பாக்கி வைத்திருந்ததை ஒப்புக் கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ய எங்களை சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டதால் நாங்கள் சம்மதித்து பொன்னுச்சாமி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்பு பதிவு செய்தார்கள்.பின்பு அதே இடத்தில் 4.30 மணியளவில் பொன்னுச்சாமி என்பவரிடம் இருந்து நாட்டுத் துப்பாக்கி ஒன்றை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் . அந்த

ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் . ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.1.** அத்தாட்சி **அ.சா.ஆ.2**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி. இல்லை</u>**

T PITCHAIRAJAN
Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2023.09.13 11:34:38 +0530